**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை**
**E.P.No.03/2024 In O.S.No.29/2018**

1) பெரியம்மாள் (இறப்பு)
2) பாப்பாத்தி .... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிர்//**

1) சாந்தி
2) ராஜசேகர்
3) லோகநாதன்
4) சிவா ...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 03.06.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினராகக் கொண்டும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக ஏற்பட்ட தீர்ப்பாணையை மீறி செயல்பட்ட எதிர்மனுதாரர்களை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 11 மற்றும் 32–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இம்மனுவில் 2ம் மனுதாரர். மனுதாரர்கள் சமூகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள் மீது தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வழக்கு தாக்கல் செய்து 24.06.2023ம் தேதி வாதிகளுக்கு சாதகமாக உத்தரவு பெற்றுள்ளனர். தாவா சொத்து

மனுதாரர்களின் அனுபவத்தில் இருந்து வரும் விபரம் எதிர்மனுதாரர்களுக்கு தெரியும். மனுதாரர்கள் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து இடைஞ்சல் செய்து வந்த காரணத்தால் மனுதாரர்கள் மேற்படி வழக்கை எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்து 24.06.2023ம் தேதி மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு பெற்றனர். 3ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் மகன். 4ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரின் மகன்.

2) கடந்த 13.03.2023ம் தேதி 2ம் மனுதாரர் தனது வயலில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நிலத்திற்குள் வந்து மனுதாரரையும், மனுதாரரின் மகளையும் அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்தனர். இது சம்பந்தமாக மனுதாரரின் மகள் குளித்தலை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண்.206/2023ல் விசாரணை செய்தபோது இனி தகராறு செய்யமாட்டோம். நீதிமன்ற தீர்ப்புப்படி நடந்து கொள்கிறோம் என எழுதிக் கொடுத்துவிட்டு சென்றனர். அதை தொடர்ந்து வழக்கில் மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பான பின் மனுதாரர்கள் தங்களது நிலத்தில் வாழைக்கண் ஊன்றி விவசாயம் செய்து வருகிறார். 22.08.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு 2ம் மனுதாரர் மற்றும் சில கூலியாட்களுடன் விவசாய வேலை செய்து கொண்டிருந்த போது எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நிலத்திற்குள் வந்து மனுதாரர்களை பார்த்து மரியாதையா நிலத்தைவிட்டு போங்க நிலத்திற்குள் வந்தா வெட்டி கொலை செய்து விடுவோம் என மிரட்டினார்கள். மனுதாரர்கள் அவர்களிடம் நிலம் எங்களுடையது நீங்களோ, உங்களை சேர்ந்தவர்களோ உள்ளே வரக்கூடாது என நீதிமன்றத்தில் தீர்ப்பாகியிருக்கும் போது எப்படி எங்க நிலத்திற்கு வந்து தகராறு செய்யலாம் என்று கேட்டதற்கு என்னடி சட்டம் பேசுற, நீ எந்தக்கோர்ட்டில் ஜெயிச்சாலும் இங்க நாங்க வச்சது தாண்டி சட்டம், கோர்ட் உனக்கு ஜெயிச்ச டிகிரி பேப்பரை மஞ்சப்பையில் போட்டுக்கொண்டு ஒவ்வொரு ஆபிசா அலைடி கோர்ட் தீர்ப்பு எங்களை என்னடி செய்யும் அதெல்லாம் எங்களுக்கு பெரிய விஷயமில்லை. அதுக்கெல்லாம் மரியாதை தரமுடியாது என்று திட்டிக்கொண்டே மனுதாரர்களை தாக்க வந்தனர். மனுதாரர்கள் பயந்து வந்துவிட்டனர்.

3) மனுதாரர் 74 வயதாக மூத்த குடிமகள் ஆவார். வயதான அவரை மிரட்டி நிலத்தை பறிக்க தகராறு செய்கின்றனர். எதிர்மனுதார்களின் செய்கையை பொறுத்து மனுதாரர் கரூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், குளித்தலை காவல்துறை துணை கண்காணிப்பாளர்

மற்றும் ஆய்வாளர் ஆகியோர்களுக்கு புகார் ஒன்றை பதிவு அஞ்சல் மூலம் 22.08.2023ம் தேதி அனுப்பியுள்ளார். எதிர்மனுதாரர்கள் செல்வாக்கு உள்ளவர்கள் என்பதால் மனுதாரரின் புகார் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்து வருகின்றனர். எதிர்மனுதாரர்கள் வேண்டுமென்றே நீதிமன்ற தீர்ப்பாணையை தெரிந்துக்கொண்டே நீதிமன்ற உத்தரவினை அவமதித்துள்ளனர். எனவே நீதிமன்ற தீர்ப்பாணையை மீறி செயல்பட்ட எதிர்மனுதாரர்களை வாரண்டில் பிடித்து சிவில் ஜெயிலுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்</u>

4) மனுவில் கூறியுள்ள சங்கதிகள் இந்த எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்கள் 24.06.2023ம் தேதிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்ய தயாராகிக் கொண்டிருந்த போது மனுதாரர்கள் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். இம்மனுவிற்கு வழக்குமூலம் இல்லை மற்றும் எவ்வாறு எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற உத்தரவினை மீறி செயல்பட்டனர் என மனுதாரர்கள் குறிப்பிடவில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் எந்தக் காலத்திலும் நீதிமன்ற உத்தரவை மீறி செயல்படவில்லை. எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. நீதிமன்ற உத்தரவினை மீறி செயல்படாத போதிலும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 11 மற்றும் 32–ன் கீழ் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

5) மனுதாரர் தரப்பில் ம.சா.1, ம.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை.

6) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

7) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பு

கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.29/2018 வழக்கு தாக்கல் செய்து 24.06.2023ம் தேதி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைக்கு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த 22.08.2023ம் தேதி எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நிலத்திற்குள் வந்து மனுதாரர்களை மிரட்டினர் என்றும், எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற உத்தரவினை மீறி செயல்பட்டதால் அவர்களை சிவில் ஜெயிலுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென இம்மனு தாக்கல் செய்துள்ளதாக வாதிட்டார்.

8) எதிர்மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள் 24.06.2023ம் தேதிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்ய தயாராகிக் கொண்டிருந்த போது மனுதாரர்கள் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எதிர்மனுதாரர்கள் எந்தக்காலத்திலும் நீதிமன்ற உத்தரவினை மீறி செயல்படவில்லை என்றும், உள் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வாதிடப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.1 – அ.வ.எண்.29/2018 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 24.06.2023ம் தேதி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்தில் உள்ள 2ம் வாதியின் அமைதியான சுவாதீனம் மற்றும் அனுபவத்தை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

9) ம.சா.ஆ.2 – 16.03.2023ம் தேதியிட்ட புகார் மனு ரசீது கணினி நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மனுதாரர் கடந்த 16.03.2023ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் சாந்தி என்பவர் மீது புகார் மனு கொடுத்துள்ளது அறியமுடிகிறது. மேலும் கடந்த 22.08.2023ம் தேதி மனுதாரர் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் நீதிமன்ற உத்தரவினை மீறி இடையூறு செய்வதாக குறிப்பிட்டு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், குளித்தலை காவல்துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்களிடம் புகார் அளித்துள்ளது ம.சா.ஆ.3ன் மூலமாக அறியமுடிகிறது. மேற்படி புகாரை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் ம.சா.ஆ.4 முதல் ம.சா.ஆ.6 வரையிலான

ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) மேலும் ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "நான் எதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது நிலம் எனக்கு வேண்டும் என கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எப்போதிலிருந்து எனது நிலம் என்னிடம் இல்லை என்றால், 2023ம் வருடத்தில் இருந்து என்னிடம் இல்லை. சாட்சி மீண்டும் நிலம் தன்னிடம் இருப்பதாகவும், அதில் விவசாயம் செய்ய சென்றால் எதிர்மனுதாரர்கள் தன்னை தாக்க வருவதாகவும் கூறியுள்ளார். மேலும் நிறைவேற்று மனுவில் 17.06.2023ல் எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை, தற்போது தான் கூறுகிறேன். நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 13.06.2023ல் கொடுத்தேன்" என சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1 மேலும் தனது குறுக்கு விசாரணையில், எனது நிலத்தில் வேலை செய்த ஆட்களுக்கு மேற்படி சம்பவம் குறித்து தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர்களை விசாரித்தால் உண்மை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர்களின் பெயர், விலாசம் தெரியுமா என்றால் தெரியாது. ம.சா.ஆ.3 புகார் சம்பந்தமாக நான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 புகார் பற்றி மனுவில் குறிப்பிடாமல் எனது சாட்சியத்தில் முதல் முறையாக தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார்.

11) ம.சா.2 தனது குறுக்கு விசாரணையில், ம.சா.ஆ.3 புகார்தான் நாங்கள் கொடுத்ததா என்றால் ஆமாம், அதில் சம்பவத்தின் போது நானும் உடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவத்தின் போது எனது தாயாரும், பெரியம்மாவும் இருந்தார்கள். எனது பெரியம்மா சொல்லி நான் வந்தேன் என சாட்சியம் அளித்துள்ளார்.

12) மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், அ.வ.எண்.29/2018 வழக்கானது 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 20.02.2018ம் தேதி தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 24.06.2023ம் தேதி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பிற்கு முன்பே 16.03.2023ம் தேதி

எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்ததாக ம.சா.ஆ.2 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் குறித்தோ, ஆவணங்களையோ அசல் வழக்கில் மனுதாரர்கள் தெரிவிக்கவில்லை. மாறாக இம்மனுவில் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. மேலும் 22.08.2023ம் தேதி எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற உத்தரவினை மீறி தாவா சொத்தில் மனுதாரரிடம் பிரச்சனை செய்ததாக காவல்துறையில் மனுதாரரால் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

13) ம.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், எப்போதிலிருந்து எனது நிலம் என்னிடம் இல்லை என்றால், 2023ம் வருடத்தில் இருந்து என்னிடம் இல்லை. சாட்சி மீண்டும் நிலம் தன்னிடம் இருப்பதாகவும், அதில் விவசாயம் செய்ய சென்றால் எதிர்மனுதாரர்கள் தன்னை தாக்க வருவதாகவும், சம்பவத்தின் போது தாவா நிலத்தில் வேலை செய்த நபர்களின் பெயர், விலாசம் தெரியாது என்றும் முன்னுக்கு பின் முரணாக தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் இருந்து மனுதாரர்கள் தாவா சொத்தின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இல்லை என்பதை அறியமுடிகிறது.

14) இந்நிலையில், தாவா சொத்தின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இல்லாத மனுதாரர்கள், சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்து, தங்களுக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளனர். பின்னிட்டு 22.08.2023ம் தேதி எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற உத்தரவினை மீறி தாவா சொத்தில் அத்து மீறி நுழைந்து மனுதாரர்களின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததாக கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை. மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை மனுதாரர் நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 12 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI
Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.சா.1 பாப்பாத்தி (2 ம் மனுதாரர்)

ம.சா.2 லதா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | அசல் வழக்கு எண்.29/2018 வழக்கின் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 16.03.2023 | புகார் மனு ரசீது | கணினி நகல் |
| ம.சா.ஆ.3 | 22.08.2023 | புகார் அஞ்சலக ரசீது | கையிருப்பு நகல் |
| ம.சா.ஆ.4 முதல் ம.சா.ஆ.6 | – | புகார் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (எண்ணிக்கை – 3) | அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**

– இல்லை –

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

– இல்லை –

R TAMILARASI
Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**